நாள். 01.07.2026

அசல் வழக்கு எண்.198/2009

பி.சா.1 பெயர் ஷேக் முகைதீன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை வாக்குமூலம் எனக்காக மட்டும் தாக்கல் செய்துள்ளேனா அல்லது எனது தாயார் மற்றும் தகப்பனாருக்கும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்களுக்கும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு வாதிகளை தெரியும் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் 2 தபசில் சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்

வழக்கு 1ம் தபசில் சொத்து வாதிகளின் வீடு என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து தான் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு என் தந்தை விவரம் சொன்னாரா என்றால் ஞாபகம் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு நான் விவரம் சொன்னேனா அல்லது கையொப்பம் மட்டும் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு வழக்கு சொத்தை அவர் பார்வையிட்டது தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை தெரியுமா என்றால் தெரியும். முதலில் தாக்கல் செய்த அறிக்கை சரியில்லை என இரண்டாவது முறை அறிக்கை தாக்கல் செய்தார்.

முதல் முறை நீதிமன்ற ஆணையர் வருவாய் துறை ஆவணங்களின் படி அளவீடுசெய்தார் என்றாலும், அதன்பிறகு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று ஆவணத்தின் படி அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்து ஆதியில் முத்துமீரான் ராவுத்தர் மற்றும் ஷேகு அலி ராவுத்தருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முத்துமீரான் ராவுத்தர் மற்றும் ஷேகு அலி

ராவுத்தர் இறந்தபிறகு அவர்களின் வாரிசுகள் 04.01.1943 ல் முத்து மீரான் என்பவருக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி முத்துமீரான் வாதியின் தந்தைக்கு 11.02.1948 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

வாதியின் தந்தை நாகூர்மைதீன் காலம் சென்ற பிறகு வாதிகளின் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் வாதிகள் தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், வாரிசு முறையில் அனுபவம் செய்து வருகிறார்கள். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மற்றும் அதன் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் முழுவதுமாக தெரியாது. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவண விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் என்ன கட்சி செய்து வருகிறோம் என தெரியுமா என்றால் தெரியும்.

வாதிகள் சார்ந்துள்ள 1907 ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துபார்த்துள்ளேன். மேற்படி 1907 ஆவணத்தில் முன் ஆவணங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆன 1907 ஆவணத்தில் முன் ஆவணங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆவணத்தில் உள்ள எழுத்துக்களை என்னால் படிக்கமுடியவில்லை. ஆவணம் படிக்கக்கூடிய நிலையில் தான் உள்ளது என்றாலும், நான் படிக்கமுடியவில்லை என சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் 30.12.1892 ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் எங்களுக்கு உரிமையுள்ளதாக கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் படித்துபார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனது கட்சிப்படி மேற்படி ஆவணத்தில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து எத்தனையாவது அயிட்டமாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில் வாதிகளின் முன்சுவான்தாரர்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் தபசில் விவரத்தில் கிழமேல் தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் கிழமேல் 8 தச்சுமுளம் 3 பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணத்தில் எந்த இடத்திலும் கிழமேல் 8 தச்சுமுளம் என்று குறிப்பிடப்படவிலலை என்றால் சரியல்ல. 1892 ஆவணத்தில் சொத்தின் விஸ்தீரணமும், நிலுவையும், கடன்களும் ஒருபாகத்திற்கு ஒரு பாகம் ஏற்றத்தாழ்வாய் காணப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. 1892 ஆவணத்தின் அடிப்படையில் தான் எனது சொத்தும் கிரையம் பெறப்பட்டதாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். 1892 ம் ஆண்டு ஆவணத்திற்கும் எனது தகப்பனார் கிரையம் பெற்றதற்குமிடையே எத்தனை கிரையங்கள் ஏற்பட்டு இருக்கும் என்றால் 2 வது அல்லது 3 வதாக இருக்கும் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

எனது தகப்பனார் கிரையத்திற்கு முன்பு 2 கிரையங்கள் ஏற்பட்டு இருக்கும் அதை நான் பார்த்து இருக்கிறேனா என்றால் பார்த்து இருப்பேன். மேற்படி கிரையங்கள் யாரிடமிருந்து எந்த தேதியில் கிரையம் பெறப்பட்டது என்றால் நான் அப்போது சிறு வயது என்பதால் எனக்கு தெரியவில்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்பு மேற்படி ஆவணங்களை படித்து பார்த்துளளேனா என்றால் அனைத்து ஆவணங்களையும் படித்து பார்த்துள்ளேன் ஆனால் தற்போது எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தான் நான் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை எனது கையில் கொடுததால் படித்து பார்க்க தயராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் படித்து பார்த்துள்ள ஆவணங்களில் விஸ்தீரணம் மற்றும் கிழமேல் அளவுகள் எவ்வளவு உள்ளது என தெரியுமா என்றால் தெரியும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன்.

நான் படித்து பார்த்துள்ள ஆவணத்தில் எனது தகப்பனார் கிரையம் பெறுவதற்கு முன்பு உள்ள ஆவணங்களின் அளவுகள் கூடுதலுமாக குறையுமாக சொல்லப்பட்டுள்ளது என்றால் 1907 ஆவணத்தில் மத்திய பாகஸ்தர் 8 தச்சுமுளத்திற்கு பதிலாக 9 ½ தச்சுமூளம் என ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள். என்னுடைய தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்திற்கு முன்பு உள்ள ஆவணங்களில் அளவுகள் வித்தியாசம் உள்ளதா என்றால் கிடையாது. மேற்படி ஆவணங்களில் அளவுகள் வித்தியாசம் உள்ளது என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.